*Volume No: 1* *Issue 1* *September 2016*

*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal of literary Explorations*
*ISSN:* 2456 - 4613
*IMIRJ, 1(1), 2016 [1-5]*

# சங்க இலக்கியத்தில் பறை



**நளினா தேவி. ஜெ.**
உதவிப்பேராசரியர், தமிழ்த்துறை,
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி,
விருதுநகர்.
E-mail: nalinadevihari@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழந்ததோடு, இசையோடும் மிகுந்த ஈடுபாடு கொண்டனர். இசைக்கருவிகளில் ஒன்றான 'பறை' சங்ககால மக்களின் வாழ்வில் பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பொழுதுபோக்கு, ஆடல், பாடல் என மனிதனின் முக்கியமான தருணங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஐவகை நிலத்திற்குரிய பறைகள், பறைகள் மனித வாழ்வில் பயன்படுத்தப்பட்ட முறைகள் பற்றிய செய்திகள் சங்க இலக்கியத்தில் பதிவாகியுள்ளன. அவற்றை எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**குறிப்புச் சொற்கள்:** பறை, ஆகுளி தொண்டகப்பறை, ஏறுகோட்பறை, கிணைப்பறை, நாவாய்ப்பறை, ஆறெறிப்பறை

**பறை**

பறை இசைப்பு என்பது தமிழரின் மகிழ்ச்சியின் குறியீடு. தொடக்கக் காலத்தில் மகிழ்வைப் புலப்படுத்த பயன்பாட்டாலும், செய்தியை பிறருக்கு அறிவிப்பதற்காகவும் இப்பறை பயன்பட்டது. காலப்போக்கில் நாகரிகம் மலர்ந்து மருத நிலத்துச் செல்வந்தர்கள் தோன்றிய பின் தொழிலடிப்படையில் தங்கள் பயன்பாட்டுப் பொருள்களை வாழும் இடத்திலுள்ள கருப்பொருளின் அடிப்படையில் பாகுபடுத்திக் கொண்டனர். பறை போர்ப்பறை, வெருப்பறை, வெறியாட்டுப்பறை, தட்டைப்பறை, சாகாட்டுப்பறை என்று ஓசை மற்றும் பயன்பாடு கருதி வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டு, சங்க இலக்கியத்தில் பதிவாகியுள்ளன.

**ஐவகை நிலத்திற்குரிய பறை**

ஐவகை நிலத்திற்குரிய பெயரால் யாழையும், பண்பையும் வகைப்படுத்தியிருப்பது போல நிலத்தின் பெயரால் பறையையும் வகைப்படுத்தியுள்ளார்.

| | | |
|---|---|---|
| குறிஞ்சி நிலத்திற்குரிய பறை | - | தொண்டகப்பறை |
| முல்லை நிலத்திற்குரிய பறை | - | ஏறுகோட்பறை |
| மருத நிலத்திற்குரிய பறை | - | கிணைப்பறை(அல்லது) நெல்லரிப்பறை |
| நெய்தல் நிலத்திற்குரிய பறை | - | நாவாய்ப்பறை (அல்லது) பம்பை |
| பாலை நிலத்திற்குரிய பறை | - | எறிப்பறை |

**தொண்டகப்பறை**

மலைநிலக் கடவுளாகிய முருகனை வணங்குவதற்கும், வேலனுக்கு நிகழ்த்தும் வெறியாட்டின் போதும் இப்பறை முழக்கப்பட்டுள்ளது. இப்பறைக்குச் சிறுபறை, அரிப்பறை, துடிப்பறை, முருகியம் எனப் பல்வேறு பெயர்கள் உண்டு.

குறிஞ்சி நில மக்களின் தெய்வம் முருகன். முருகனுக்கு விழா எடுக்கும் போது தொண்டகப்பறையை முழக்குவர். திருமுருகாற்றுப்படையில் குறவர்கள் முருகனை வழிபட தொண்டகப்பறையை பயன்படுத்தினர்.

''குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர'' [1]

என்ற திருமுருகாற்றுப்படை வரிகள் சான்று பகர்கின்றன.

**ஏறுகோட்பறை**

முல்லை நிலத்துப் பறை ஏறுகோட்பறை. பருவம் வந்த கன்னி வளர்த்த காளைகளை ஆடவர் தழுவிடின் அவள் தழுவியனுக்குச் சொந்தமானவள் எனப் பறையறைந்து முல்லை நில ஆயர்கள் அறிவிப்பர். அத்தகைய மங்கையரை மணக்கச் சடங்கு முறை விளையாட்டாக இருப்பது ஏறு தழுவுதலே. அப்போது முழக்கப்படும் பறை ஏறுகோட் பறையாகும்.இப்பறை கொங்கு மாவட்டத்தில் நடைபெறும் திருவிழாக்களில் இசைக்கப்படுகின்றனர்.

''சொல்லுக! பாணியேம் என்றார் அறைக
மாணிழை ஆறாகச் சாறு'' என்றார் பாரித்தார்''[2]

ஏறுதழுவுதலுக்குப் பறை அறைதலை கலித்தொகை வரிகள் சான்று பகர்கின்றன.

**கிணைப்பறை**

மருதநிலத்துப் பறை கிணைப்பறையாகும். இதனை நெல்லரிப்பறை என்றும் தண்ணுமை என்றும் அழைப்பர். வயல் சார்ந்த தொழில் புரியும் போதெல்லாம் இப்பறை அடிக்கப்படும். ஆடல் பாடல்களை நிகழ்த்தவும், மருத நில மக்களின் வழிபாடுகளிலும் இப்பறை முழங்கப்பட்டுள்ளது. இதனை ‘‘தமுக்குப்போடுதல்’’ என்றும் கூறுவர் இதனை

‘‘கழனியுழவர் தண்ணுமை இசைப்பின்’’[3]

எனப் பதிற்றுப்பத்து வரிகள் சான்று பகர்கின்றன.

**நாவாய்ப்பறை**

நெய்தல் நிலத்துப்பறை நாவாய்ப்பறையாகும்.இதனை ‘மீன் கோட்பறை’ சாகாட்டுப்பறை என்றும் அழைப்பர். கடல் சார்ந்த நெய்தல் நிலத்தில் மீன் பிடித்து வாழும் அந்நில மக்கள் தங்கள் வாழ்வில் எல்லா நிகழ்வுக்கும் பயன்படுத்துவது நாவாய்ப்பறை. நாவாயில் ஏறி மீன் பிடிக்கச் செல்லும் போது பரதவர்கள் வழிபாடு நடத்தி பறை முழக்கிச் செல்லும் மரபு இருந்துள்ளது. தஞ்சை, மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ‘‘தப்பாட்டம்’’ என்ற பெயரில் தற்போது வளர்ச்சி பெற்று வருகிறது. இப்பறை இறப்புச்சடங்கிற்கும் பயன்படுகின்றது. ஒரு வீட்டில் சாவுப்பறை ஒலித்தது என்பதை

‘ஓரில் நெய்தல் கறங்க’’[4]

என்ற புறநானூற்று அடி வெளிப்படுத்துகிறது.

**ஆறெறிப்பறை**

பாலை நிலத்துப்பறை ஆறெறிப்பறை. இப்பறை ஆறலைக் கள்வர்களால் முழக்கப்பட்டுள்ளது. சேக்கொள்பறை, சூறைகொள்பறை என்றெல்லாம் அழைக்கப்பட்டுள்ளது. கொள்ளை அடிப்பதில் மகிழ்ச்சி கொண்டு வெறியாட்டம் போடும் கள்வர்கள் வன்மையாக இசைக்கும் பறை ஆறெறிப்பறை என்பதாகும். இப்பறை அச்ச உணர்வைத் தரும் என்பதை

‘‘மடிவாய்த் தண்ணுமைத் தழங்கு குரல் கேட்ட’’[5] என

நற்றிணைப் பாடல் வரி உணர்த்துகிறது.

**பறை பற்றிய பிற செய்திகள்**

சூலுற்ற மகளிர் வீட்டில் தெய்வங்களை வழிபடும் போது மென்மையான இயல்புடைய ‘ஆகுளி’ என்ற சிறுபறையை ஒலித்தனர். இதனை

‘‘முழவொடு ஒன்றி
நுண்நீர் ஆகுளி இரட்ட’’[6]

என்று மதுரைக்காஞ்சி அடிகள் உணர்த்துகின்றன. அசுணம் என்னும் பறவை யாழிசையைக் கேட்டு மகிழும். பறையிசையைக் கேட்டு இறந்து விடும் என்னும் செய்தியை

"இஞ்சிறைத் தொழுதி ஆர்ப்ப யாழ் செத்து
இருங்கல் விடர் அளை அசுணம் ஓர்க்கும்"[7]

என அகநானூற்று பாடல் வரிகள் உணர்த்துகின்றன. மதம் கொண்ட யானையை நீர்த்துறைக்கு அழைத்துச் செல்லும் பொழுது எதிரே வரும் மனிதர்களுக்குத் துன்பம் ஏற்படாத வகையில் பறையறைந்து செல்வது வழக்கம் என்பதை

"நிரை அழி கொல் யானை நீர்க்கு விட்டாங்குப்
பறை அறைந்தல்லது செல்லற்க"[8]
வெருஉப் பறை நுவலும் பரூஉப் பெருந்தடக்கை
வெருவரு செலவின்"[9]

கலித்தொகை, பொருநராற்றுப்படை வரிகள் உணர்த்துகின்றன. ஊருக்குள் நிகழும் முக்கியமான நிகழ்வுகள், திருவிழாக்கள் போன்றவற்றை பறையறைந்து அறிவிப்பர். இதனை

"முழங்கு இசை நன்பணை அறைவனர் நுவல்"[10]

என மதுரைக்காஞ்சி பதிவு செய்துள்ளது.

குறமகள் தினைப்புனத்தில் படியும் கிளிகளை ஓட்டச் சிறு பறையை பயன்படுத்தியுள்ளார். இதனை

"தொண்டகச் சிறுபறைப் பாணி அயலது
பைந்தாட் செந்தினைப் படுகிளி ஓம்பும்"[11]

என்னும் நற்றிணை அடிகள் மூலம் அறியலாம். மலைப்பகுதியில் குறவர் மக்கள் தம் விளைநிலத்தில் விளைவித்திருந்த சேம்பினையும், மஞ்சளையும் தோண்டி அழிக்காமல் இருக்கவும், பன்றிகள் அருகில் வராமல் இருக்கவும் பறையினை அடிப்பர். இதனைச்

"சேம்பும் மஞ்சளும் ஓம்பினர் காப்போர்
பன்றிப் பறையும் குன்றச் சிலம்பும்"[12]

என்ற மலைபடுகடாம் அடிகள் புலப்படுத்துகின்றன. போர்க்களத்திலும் அரண்மனைகளிலும் பறை அடிக்கப்படும். அப்பறை அளவில் பெரியது. பெரியளவில் ஓசையை வெளிப்படுத்தக் கூடியது. அதைப் போன்ற கருவியினைச் சங்க காலச் செல்வந்தர்களின் குழந்தைகள் பயன்படுத்தினர். இதனை

"பொன்னுடைப்புதல்வர்
சிறுகோட் கோத்த செவ்வரிப்பறையின்"[13]

என்ற நற்றிணை அடிகள் மூலம் அறியலாம். சங்ககால மக்கள் புது வெள்ளம் வரும் போது அதனைச் சென்று பார்ப்பது வேடிக்கையான ஒரு பொழுது போக்காகக் கொண்டிருந்தனர். புது நீர் வருகையை அறிவிக்கப் பறை அறைந்துள்ளனர். வெள்ளம் பெருகியதால் கரைக் காவலரை அழைக்க பறைகள் முழங்கின என்பதை,

"ஊர் ஊர் பறை ஒலி கொண்டன்று உயர்மதிலில்
நீர் ஊர் அரவத்தால்"
திரைச் சிறை உடைத்தன்று கரைச்சிறை அறைக எனும்
உரைச்சிறைப் பறை எழ ஊர் ஒலித்தன்று"[14]

பரிபாடல் அடிகள் உணர்த்துகின்றன.

**அடிக்குறிப்புகள்**


[1]. திருமுருகாற்றுப்படை பா.எண் 196

[2]. கலித்தொகை – முல்லைக்கலி பா.எண் 103

[3]. பதிற்றுப்பத்து பா.எண் 90

[4]. புறநானூறு பா.எண் 194

[5]. நற்றிணை பா.எண் 298

[6]. மதுரைக்காஞ்சி பா.எண் 605

[7]. அகநானூறு பா.எண் 88

[8]. கலித்தொகை பா.எண் 56

[9]. பொருநராற்றுப்படை பா.எண் 171

[10]. மதுரைக்காஞ்சி பா.எண் 362

[11]. நற்றிணை பா.எண் 104

[12]. மலைபடுகடாம் பா.எண் 343

[13]. நற்றிணை பா.எண் 58

[14]. பரிபாடல் வையை பா.எண் 20, பா.எண் 6